4

### வெற்றிகரமான திருமணத்திற்கான வழிவகை ...

# அன்பே திறவுகோல் என்பதை அறிந்துகொள்ளுதல்

*நீங்கள் திருமணம் செய்து கொள்ளும்போது உங்களது திருமணம் நிலைத்திருக்க வேண்டுமென்றே விரும்புகிறீர்கள். வாழ்நாள் முழுவதும் நீடித்திருக்கும் ஓர் திருமணத்தை நீங்கள் விரும்புவீர்களேயானால், அதற்கு முதலாவதாக தேவைப்படுவது அர்ப்பணிப்பு ஆகும். நீங்களும் உங்கள் துணையாளியும் உங்களது திருமணத்திற்கும், பரஸ்பரம் ஒருவர் மற்றொருவருக்கும் அர்ப்பணித்துக் கொண்டவர்களாயிருக்க வேண்டும். உங்களது அர்ப்பணிப்பு போதிய அளவிற்கு திடமாயிருக்குமானால் உங்களது திருமணமானது அனைத்துவிதமான பிரச்சனைகளிலும் தாக்குப்பிடிக்கும்.*

*இருப்பினும், ஒரு திடமான அர்ப்பணிப்பிற்கு அன்பே திறவுகோல். உங்கள் அன்பு போதிய அளவிற்கு மேன்மையுள்ளதாயிருக்குமானால் அது உங்களது அர்ப்பணிப்பினை நிலைநிறுத்திக் கொள்ளும்.*

*அன்பே அர்ப்பணிப்பிற்கு ஆதாரம் என்பதின் பொருளென்ன? கிரேக்கர்கள் நான்கு வகைப்பட்ட "அன்பினைக்" குறிப்பிடும் நான்கு வித்தியாசப்பட்ட வார்த்தைகளைக் கொண்டிருந்தனர். அந்த நால்வகை அன்பில், ஒவ்வொன்றுமே ஓர் சந்தோஷமான திருமணத்திற்கு முக்கியமானவை ஆகும்.*

## ஈராஸ் - பாலியல் அன்பு - நேசம்

*கிரேக்கர் கண்டுகொண்ட முதல் வகை அன்பு ... ஈராஸ் என்பதாகும். ஈராஸ் என்பது காதல்/நேசம்/காமம் சம்பந்தமான, பாலியல் அன்பு; இந்த வார்த்தையை "நேசம்" என்ற தமிழ்ப்பதிப்பில் காணலாம். கிரேக்க புதிய ஏற்பாட்டில் இந்த ஈராஸ் (நேசம்) என்ற பதம் காணப்படவில்லையெனினும் அந்தக் கருத்து அங்கே காணப்படுகிறது (எடுத்துக்காட்டாக 1 கொரிந்தியர் 7ம் அதிகாரம்). புதிய ஏற்பாடு நேசம் என்கிற அன்பை ஆட்சேபிக்கவில்லை, ஆனால் அது விவாக மஞ்சம் என்கிற எல்லைக்குள் அடக்கப்பட்டிருக்கிறது. பழைய ஏற்பாடோ, சாலொமோனின் உன்னதப்பாட்டில் இதனைப் புகழ்ந்து கொண்டாடுகிறது!*

*புதிதாய் திருமணமானவர்களைப் பொறுத்த வரையில் இந்த நேசம் அல்லது பாலியல் அன்பு என்பது அவர்களது உறவில் ஓர் முக்கிய பங்கு வகிப்பதைக் காணலாம். திருமணத்தில், பாலுறவு என்பது சுகித்திட வேண்டிய ஒன்றாகும். திருமணத்தில் இருக்க வேண்டிய ஒற்றுமையை அடைவதற்கு இது ஒரு கருவியாயிருக்க வேண்டும்.*

*ஆயினும், விரைவிலேயே ஒரு தம்பதியினரின் ஆரம்பகால பாலுறவு அனுபவங்களின் உத்வேகம் குறைந்துபோய், பாலுறவென்பது வழக்கமான ஒன்றாகவும், சுவாரஸ்யமற்றதாகவும் மாறிவிடலாம். வருடங்கள் கடக்கும்போது,*

*சில தம்பதியர் தங்களது பாலுறவு ஈடுபாடுகளில் குறைந்த அளவு திருப்தியை பெறுகின்றனர். இந்த உண்மையானது, தம்பதியர் செய்ய வேண்டிய இரண்டு காரியங்களை உணர்த்துகிறது.*

***பாலியல் உறவினை வளர்த்திடுங்கள்***

*திருமணத் தம்பதியர் ஒருவர் மீது ஒருவருக்குள்ள பாலுணர்வு மந்தமாகிவிடும் சூழலைத் தவிர்த்திட வேண்டும். தம்பதியர் இருவருமே தங்களது பாலியல் வாழ்க்கை சுவாரஸ்யமானதாகவும், இன்பகரமானதாகவும் இருப்பதற்கு என்னவெல்லாம் செய்யமுடியுமோ அதை செய்திட வேண்டும். கணவன் தன் மனைவியைக் காதலிப்பதை ஒருபோதும் நிறுத்திவிடக்கூடாது, அதுபோலவே மனைவியும் தனது கணவனைக் கவர்ந்திழுக்கும் முயற்சியை என்றுமே நிறுத்திக் கொள்ளலாகாது. தம்பதியர் தங்களது வீட்டை சுத்தமாக வைத்துக் கொள்வதிலும் அதை நன்கு செப்பனிடுவதிலும் கவனம் செலுத்துகின்ற அதே அளவிற்கு தங்கள் பாலியல் வாழ்வு ருசிகரமாயிருப்பதற்கு கவனம் செலுத்துவார்களேயானால், அவர்களது “நேசம்” என்கிற அன்பு வளர்ந்தோங்குவதற்கு பதிலாக குன்றிப் போவதற்கு காரணம் ஏதுமில்லை.*

***பாலியல் உறவினை கருத்தில் கொள்ளுங்கள்***

*மேலும், ஒரு தம்பதியரின் நேசதாபம் என்பது ஆண்டுகள் கடக்கும்போது குறைந்துபோகக்கூடியது என்கிற உண்மையானது, திருமணம் ஆரோக்கியமானதாக நிலைத்திருப்பதற்கு நேசம் மட்டுமே போதுமானது அல்ல என்பதனை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டுமென்பதை உணர்த்துகிறது. நேசம் என்கிற அன்பு திருமணத்தில் இன்பகரமானது, திருமண பந்தங்களைப் பிணைப்பதற்கு பேருதவியானது; ஆயினும் அது போதுமானது அல்ல! காலப்போக்கில், கிட்டதட்ட தவிர்க்கவே முடியாத அளவிற்கு பாலின வசீகரம் கொஞ்சம் மங்கத்தான் செய்கிறது. திருமணமாகும் போது மனைவிக்கு இருந்த எடை இப்போது மாறுபட்டிருக்கும் போது, கணவனுக்கு அப்போதிருந்த தலைமுடியில் எல்லாமே உதிர்ந்துபோய், இடுப்பளவு இப்போது ஆறு அங்குலம் அதிகரித்திருக்கும்போது அவர்களது திருமணத்தைக் கட்டிகாப்பது எது? அது நேசம் என்கிற அன்பல்ல! நீங்கள் திருமணம் செய்துகொள்ளும்போது, பாலின வசீகரம் என்பது எவ்வளவுதான் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தாலும், அது ஐம்பது வருடகாலம் அப்படியே நிலைத்திருக்காது என்பதை நீங்கள் தெளிவாக அறிந்து கொள்ள வேண்டும். இந்த நேசம் என்கிற அன்போடு, வேறு வகையான அன்பும் உங்களுக்கு தேவைப்படுகின்றன.*

## *ஸ்டோர்ஜ் - குடும்ப அன்பு - பாசம்*

*கிரேக்க சொல்லாக்கத்திலுள்ள மற்றொரு வகை அன்பு ... (ஸ்டோர்ஜ்), குடும்ப வகையிலானதோர் அன்பு மற்றும் பாசம் ஆகும். புதிய ஏற்பாட்டில் இது எதிர்மறை வடிவத்தில் காணப்படுகிறது.*[1]

*டேவிட் ரோப்பர் இது பற்றி சொன்னதாவது:*

> *இது ஏதோ ஒரு நெருங்கிய பந்தத்தின் அடிப்படையிலானதோர் அன்பு அல்லது பற்றுதல் ஆகும். உலகப்பிரகாரமான இலக்கியத்தில், (இவ்வார்த்தை)*

ஒரு ஆட்சியாளனுக்கோ அல்லது புறமதத்து வீட்டு விக்கிரகத்திற்கோ விசுவாசமாய் இருத்தலுக்கு பயன்படுத்தப்பட்டது ...

வென்டல் புரீம் இதனை, "மின்னி அத்தை அன்பு" என்கிறார். மின்னி அத்தை மீது நாங்கள் அன்பு காட்டுவதும், அவர்களுக்கு உதவிசெய்ய முயற்சிப்பதும் அவர்கள் சரீரதோற்றத்தில் வசிகரமாயிருப்பதனால் (நேசம்) அல்ல, ஆனால் அவர்கள் எங்கள் அத்தையாய் இருப்பதனாலேயே. அவர்கள் முதுமையால் நினைவாற்றலை இழக்கலாம், செவிடாகலாம், கண்பார்வை மங்கிடலாம், என்றாலும் அவர்கள் என்றும் எங்கள் மின்னி அத்தைதானே[2], என்கிறார். ...

(*ஸ்டோர்ஜ்ஜின்* பெயர்சொல் வடிவமான) *ஸ்டோர்ஜோஸ்* என்பதின் பொருள் "உறவினர்கள் அன்பு, குறிப்பாக பிள்ளைகளிடத்தில் பெற்றோரும், பெற்றோரிடத்தில் பிள்ளைகளும் காட்டும் அன்பாகும்" என்று வைன் கூறினார்[3].

கணவனும் மனைவியும் குடும்பத்தின் அங்கங்களாயிருக்கின்றபடியினாலும், ஒருவருக்கொருவர் அவர்கள் கடமைப்பட்டவர்களாயிருப்பதாலும், திருமண உறவுமுறைக்கு இந்த *ஸ்டோர்ஜ்* (பாசம்) என்ற கருத்து பொருந்துவதாயிருக்கிறது. உண்மையில், ஒரு சமூகத்தின் நலன் என்பது, பெரும்பான்மை குடிமக்கள் தங்களது திருமண வாக்குறுதிகளுக்கு உண்மையுள்ளவர்களாய் நிலைத்திருப்பதைப் பொருத்தே அமைகிறது. கண்ணிய உணர்வு, சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் எது நன்மை பயக்கும் என்ற அறிவு, தனது வாழ்க்கைத் துணைக்கு தான் கடன்பட்டவர் என்கிற உணர்வு, தனது கடமையைச் செய்வதற்குரிய விருப்பம் ஆகிய இவை அனைத்தையுமே திருமணத்தைப் பொறுத்தவரையில் *ஸ்டோர்ஜ்ஜிற்கு* (பாசத்திற்கு) நிகராக்கலாம், இத்தகைய பண்புகள், சமூகம், பந்தப்பட்ட தொடர் குடும்பங்கள் மற்றும் பிள்ளைகளின் நலனுக்காகவும், இன்னும் அந்த தம்பதியரின் நலனுக்காகவும் - காதல் அன்பு மறந்துபோன பிறகு - திருமணத்தைக் கட்டிக்காப்பதற்கு உதவிடும்.

## ஃபிலியா - நட்பின் அன்பு

திருமண பந்தத்தில் அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாயிருப்பது இந்த ... (*ஃபிலியா*) - தோழமை அன்பு ஆகும். ரோப்பர் அவர்கள் கூறுகின்றபடி *ஃபிலியா* என்பது புதிய ஏற்பாட்டில் ஒரே தரம் மட்டுமே பிரயோகிக்கப்பட்டிருக்கிறது (யாக்கோபு 4:4ல் அது "சிநேகம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது). அதன் வினைச்சொல் வடிவமாகிய *ஃபிலியோ* என்பது இருபத்தி ஐந்து முறை பிரயோகிக்கப்பட்டிருக்கிறது. அவற்றில் இருபத்தியொரு சந்தர்ப்பங்கள் சுவிசேஷங்கள், முக்கியமாக யோவானில் காணப்படுகின்றன[4]. அதன் பெயர்சொல் வடிவமாகிய ஃபிலோஸ் என்பது ஒரே விதமாக "சிநேகிதன்" என மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இதன் மூல வார்த்தையானது, "சகோதர சிநேகம்" என்று பொருள்படும் "ஃபிலதெல்பியா" மற்றும் "மனுக்குல சிநேகம்" என்ற அர்த்தமுள்ள "ஃபிலேந்திரோபி" ஆகிய கூட்டுச் சொற்களில் காணப்படுகிறது[5].

திருமணம் செய்துகொள்வதென்றால் என்னவென்பதைக் குறித்து முழுவதுமாய் நீங்கள் எப்போதாவது சிந்தித்துப் பார்த்ததுண்டா? அதாவது, வரப்போகிற ஐம்பது வருடங்களுக்கு நீங்கள் வாழ கர்த்தர் உங்களை

அனுமதித்தால் உங்கள் கணவனோ அல்லது மனைவியோ ஆகிய அந்த ஒரே நபரோடுதான் நீங்கள் இருக்கப்போகிறீர்கள். நீங்கள் ஒன்று சேர்ந்து உறங்கி விழிக்கையில், உங்கள் வாழ்க்கை துணைதான் ஒவ்வொரு இரவும் கண் மூடுவதற்கு முன் நீங்கள் கடைசியாக பார்க்கின்ற நபராகவும் ஒவ்வொரு காலையும் நீங்கள் முதலாவது பார்க்கின்ற நபராகவும் இருப்பார். நீங்கள் ஐம்பது வருடகாலம் சேர்ந்து வாழ்வீர்களேயானால், அக்காலகட்டத்தில் ஒரு நாளைக்கு இருவேளை சாப்பாட்டை பகிர்ந்து கொள்வீர்களேயானால், ஒருமித்து நீங்கள் 36,000 சாப்பாட்டிற்குமேல் சாப்பிடுவீர்கள்! ஒவ்வொரு இரவும் எட்டு மணிநேரம் தூக்கத்திற்கும், வாரத்தில் நாற்பது மணிநேரம் வேலைக்கும் போக ஒரு வாரத்தில் எழுபத்தி இரண்டு மணி நேரமாவது ஒருவரோடு ஒருவர் செலவழிக்கப்போகிறீர்கள்.

அந்த அளவிற்கு இந்த நபரோடேயே நீங்கள் இருக்கப்போகிறபடியால், நீங்கள் இருவரும் நண்பர்களாய் இருப்பதற்கு, அதுவும் *சிறந்த* நண்பர்களாய் இருப்பதற்கு உங்களாலான மட்டும் பிரயாசப்படுங்கள். அதை நீங்கள் எவ்வாறு செய்திடலாம்? ஒருவரை நண்பனாக்குவதற்கும், நண்பனான ஒருவரைத் தக்கவைத்துக் கொள்வதற்கும் நீங்கள் சிநேகபாவமான விதத்தில் நடந்து கொள்ளுகிறீர்கள் ... பரஸ்பரம் விருப்பங்கள் மற்றும் செயல்பாடுகளைக் கண்டறியவும் அவற்றை வலியுறுத்தவும் முனைகிறீர்கள் ... உங்களது உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வதோடு உங்கள் நண்பர் தமது உணர்ச்சிகளை எடுத்துரைக்கையில் கவனித்துக் கேட்கிறீர்கள் ... உங்களது நண்பனுக்கு பிரச்சனைகள் இருந்தால் அதற்காக நீங்கள் அனுதாபப்படுகிறீர்கள் ... உங்கள் நண்பரோடு நீங்கள் நேரம் செலவிடுகிறீர்கள் மற்றும் ஒருவருக்கொருவர் எப்போதும் உற்சாகமூட்டுகிறீர்கள். வேறு எவருடன் இருப்பதையும்விட வாழ்க்கைத்துணையுடன் இருப்பதையே நீங்கள் அதிகமாய் விரும்பிட வேண்டும்.

## அகாபே - கிறிஸ்தவ அன்பு

“அன்பு” என்பதற்கான நான்காவது வார்த்தை அகாபே ஆகும். *அகாபே* தான் புதிய ஏற்பாட்டில் “அன்பு” என்பதற்கான விருப்பத்திற்குரிய வார்த்தையாயிருக்கிறது. மனிதன்மீது தேவன் கொண்டுள்ள அன்பிற்கும் (உதாரணமாக யோவான் 3:16ல்), கிறிஸ்து பிறரது பாவங்களுக்காக சிலுவையில் மரிக்கையில் வெளிப்படுத்தப்பட்ட அன்பிற்கும் (உதாரணமாக கலாத்தியர் 2:20 காண்க), இந்த வார்த்தைகள்தான் பிரயோகிக்கப்படுகிறது. ஒருவரிலொருவர் அன்புகூருங்கள் என வேதம் கூறுவது போல கிறிஸ்தவர்களிடம் இருக்கவேண்டிய ஒன்றாக கட்டளையிடப்பட்டுள்ள அன்பு இதுதான் (யோவான் 13:34; 1 யோவான் 4:7; மத்தேயு 22:39). எபேசியர் 5:25-33ன் படி மனைவிகள் மீது அவர்தம் கணவர்மாருக்கு இருக்கவேண்டிய அன்பும் கூட இதுவே தான்,

> புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து, தாம் அதை திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து பரிசுத்தமாக்குகிறதற்கும், கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்கு முன் நிறுத்திக்

கொள்வதற்கும் தம்மைத் தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார். அப்படியே, புருஷர்களும் தங்கள் மனைவிகளைத் தங்கள் சொந்த சரீரங்களாக பாவித்து, அவர்களில் அன்புகூரவேண்டும்; தன் மனைவியில் அன்புகூருகிறவன் தன்னில்தான் அன்புகூருகிறான். தன் சொந்த மாம்சத்தைப் பகைத்தவன் ஒருவனுமில்லையே; கர்த்தர் சபையைப் போஷித்துக் காப்பாற்றுகிறது போல ஒவ்வொருவனும் தன் மாம்சத்தைப் போஷித்துக் காப்பாற்றுகிறான். நாம் அவருடைய சரீரத்தின் அவயவங்களாயும், அவருடைய மாம்சத்திற்கும் அவருடைய எலும்புகளுக்கும் உரியவர்களாயும் இருக்கிறோம் ... எப்படியும் உங்களிலும் அவனவன் தன்னிடத்தில் அன்புகூருவதுபோல, தன் மனைவியினிடத்திலும் அன்புகூரக்கடவன்; மனைவியும் புருஷனிடத்தில் பயபக்தியாயிருக்கக்கடவள்.

### *அகாபே* என்பது என்ன

இந்த *அகாபே* அன்பு என்பது என்ன? அது முற்றிலுமாக, அல்லது அடிப்படையிலேயே, ஒரு உணர்வு அல்ல. அது, பதிலுக்கு பதில் செய்த ஓர் அன்பாயிருக்க வேண்டியதில்லை. அது, அன்புபெற தகுதியானவர்களுக்கு மட்டும் உரியது அல்ல. அது சுய தேவையை நிறைவேற்றிக் கொள்கிற ஓர் அன்பல்ல.[6] மாறாக அது தன்னால் நேசிக்கப்படுகிறவருக்கு எது சிறந்ததோ அதை நாடி தன்னையே அர்ப்பணித்திடும் அன்பு. அதில் உணர்ச்சிகளைவிட இஷ்டம் அதிகமாக சம்பந்தப்பட்டிருக்கிறது. தன்னால் நேசிக்கிப்படுகிற நபர் அந்த அன்பிற்கு தகுதியானவர்கள்தானா என அது எதிர்பார்ப்பதில்லை.[7]

அத்தகைய அன்பு இயேசுவால் சிறப்பாக சித்தரிக்கப்பட்டது. இயேசு யாரை இரட்சிக்க வந்தாரோ அந்த ஜனங்கள் இரட்சிக்கப்படுவதற்குரிய தகுதியைப் பெறும்வரை அவர் காத்து நின்றாரா? இல்லை, “நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்தார்” (ரோமர் 5:8).

1 கொரிந்தியர் 13:4-7ல் பவுல் குறிப்பிடுகிற குணாதிசயங்களை கருத்தில் கொண்டும் இந்த *அகாபே* அன்பினை விவரிக்கலாம்:

அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது; அன்புக்கு பொறாமையில்லை; அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது, அயோக்கியமானதைச் செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது, அநியாயத்தில் சந்தோஷப்படாமல் சத்தியத்தில் சந்தோஷப்படும்; சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும்.

இந்தப் பண்புகளையுடைய ஒருவர் விருப்பத்திற்குரியவர்; ஆகையால் இத்தகைய நபரோடு வாழ்வது எளிதாயிருக்கும். ஆக, உங்களது திருமணம் நிலைத்திருக்க வேண்டுமென நீங்கள் விரும்பினால், அன்புள்ளவராய் மாறிடுங்கள். எடுத்துக்காட்டாக, இந்தவகையிலான அன்புடன் தன் மனைவியை நேசிக்கின்ற ஒரு கிறிஸ்தவ கணவனை நாம் எவ்விதம் விவரிக்கலாம்?

... அவர் அவளிடம் “நீடிய சாந்தமும்” “தயவும்” உள்ளவராயிருப்பார். அவர்

“இருமாப்பாய்” இருக்கமாட்டார்; அவளிடம் அவர் “அயோக்கியமானதை” செய்யமாட்டார் (கண்ணியமுள்ளவராய் இருப்பார்); அவளைப் பொறுத்த விஷயங்களில் அவர் “தற்பொழிவை நாடமாட்டார்” (அதாவது சுயநலம் உள்ளவராய் இருக்கமாட்டார்). அவளிடத்தில் அவர் (எளிதில்) “சினமடையமாட்டார்,” (நடந்துபோன தவறுகளுக்காக கசப்புணர்வு கொள்ளமாட்டார்). அவர் “சகலத்தையும் தாங்கிக் கொள்ளுவார்” (எது நடந்தாலும் அன்பு செலுத்திக் கொண்டே இருப்பார்), அவர் “சகலத்தையும் நம்புவார்” (சந்தேகப்படுகிறவராய் இருக்கமாட்டார்).[8]

*அகாபே அன்புதான்* நீடித்த திருமணத்திற்கான சூட்சமம் ஆகும். நேச ஆசைகள் மங்கிப்போன சமயத்தில், கடமையின் கட்டாயங்கள் நிர்பந்திக்காத போது, நட்புறவு என்பது சாத்தியமற்றதாய்த் தோன்றும் போது, கிறிஸ்தவ அன்பாகிய *அகாபே* என்கிற அன்பே, “நன்மையிலும் தீமையிலும், வாழ்விலும் தாழ்விலும் சுகத்திலும் துக்கத்திலும்” நிலைத்திருக்கும். ஏன்? ஏனென்றால், இத்தகைய அன்பைக் கடைப்பிடிக்கும் ஒருவர் எப்போதுமே தனது நலனைவிட தனது அன்பிற்குரியவரின் நலன்மீது அதிக அக்கரையுள்ளவராய் இருக்கிறார். இரண்டு பேர் இந்த அகாபே அன்பினால் ஒருவரையொருவர் நேசிக்கிறவர்களாய் இருப்பார்களேயானால் அவர்களில் அவனோ அல்லது அவளோ தனது போக்கிற்கு அடுத்தவரை நிர்பந்திக்காமல் அவரது விருப்பங்கபுக்கு விட்டுக்கொடுக்க தீர்மானித்தவர்களாயிருப்பார்கள்.

### *அகாபே* என்ன செய்கிறது: சில உதாரணங்கள்

*அகாபே* என்பது திருமணமான பெண்மணி ஒருவர் ஏதும் செய்வதறியாது, தனக்கு ஏதும் செய்து கொள்ள இயலாமல் தவிக்கும் தனது ஏறக்குறைய குருடான கணவனை கவனமாய் பார்த்துக் கொள்வதன் மூலம் செயல்படுத்திக் காட்டப்படும் அன்பின் வகையாகும். தனது மனைவி பலவீனப்படுத்துகிற ஓர் வியாதியால் அவதிப்படுகையில் அவளைத் தொடர்ந்து பத்திரமாய் பார்த்துக் கொள்ளும் கணவன் காட்டும் அன்பு இது. ஒரு மனைவி பக்கவாத நோயால் திடிரென்று பாதிக்கப்பட்டு, அதன்பிறகு வீட்டை சுத்தம் செய்யவோ, சமைக்கவோ, தன்னைத் தானே கவனித்துக் கொள்ளவோ இயலாமற்போகும் நிலையில், அவளை அவளது கணவன் கவனித்துக் கொள்வதற்கு, அல்லது ஊனமுற்ற ஒரு கணவனை அவரது மனைவி அவரது மரணம் வரை பல வருடங்கள் கவனித்துக் கொள்வதற்கு இந்த *அன்பு தான்* பலன் கொடுக்கிறது.

இந்த *அகாபே* எனும் அன்பில்லாமை, இளம் பெண்களை திருமணம் செய்து கொள்வதற்காக இருபது வருடகாலமாய் தங்கள் மனைவியாயிருந்தவர்களைக் கணவர்மார் விவாகரத்து செய்துவிடும் நிலைக்கு வழிவகுத்துவிடும். இந்த வகை அன்பில்லையானால், கணவன் தனது போக்கில் போவதையே வற்புறுத்திக் கொண்டிருப்பார் அல்லது மனைவிக்கு தேவையானது அவளுக்கு கிடைக்காதபட்சத்தில் அவள் வெறுப்பையே தனக்குள் தேக்கிவைத்திருப்பாள். இந்த அகாபே எனும் அன்பை தனக்குள் வளர்த்துக் கொள்ளாத ஒருவர், தனது வாழ்க்கைத்துணைவர் தன்னிடம் முறைகேடாக நடந்து கொண்டபடியினால் அவருக்கு அல்லது அவளுக்கு துரோகம் செய்ததில் தவறேதுமில்லை என்று கருதிக் கொள்வார்.

*அகாபே அன்பு எவ்வாறு வளர்ச்சியடைகிறது*

இவ்விதமாய் அன்புகூருதல் என்பது ஓர் சவால்தான். அகாபே எனும் அன்பினை விரும்பும் தேவனுடைய மக்கள் தங்களது மனுஷீக சுபாவத்தைக் களைந்துபோட வேண்டுமென்றும் - அதாவது எது இயல்பாக வருகிறதோ அதைச் செய்ய மறுத்திட வேண்டு மென்றும் - தேவனுடைய திவ்விய சுபாவத்தைத் தரித்துக் கொண்டு அவரைப் போலவே இருக்க வேண்டுமென்றும் தேவன் அறைகூவல் விடுக்கிறார் (காண்க 2 பேதுரு 1:4). இருப்பினும், வேதம் கூறுகின்றபடி மாறுவதற்கு அவர் தமது பிள்ளைகளுக்கு உதவி செய்கிறார்; பிறரை நேசிக்க, ஒரு வாழ்க்கைத்துணையையும்கூட சரியான விதத்தில் நேசிக்க அவர் பெலன் தருகிறார். மேலும், ஒரு இராப் பொழுதிலேயே அன்புகூருவதில் பரிபூரணமடைந்துவிட வேண்டுமென தேவன் யாரிடமும் எதிர்பார்ப்பதில்லை. கிறிஸ்து மனுக்குலத்தை நேசித்தது போல, பிறரிடமும் அன்புசெலுத்தக் கற்றுக்கொள்ளுதல் என்பது ஓர் வாழ்நாள் பிரயத்தனமாகும். நீங்கள் எப்படியிருக்க வேண்டுமோ அப்படிப்பட்டவராய் மாறி, அதன் விளைவாக உங்களது திருமணத்திற்கு நன்மை உண்டாகும்படிக்கு, உடனடியாக அந்தப் பாதையிலே பயணத்தைத் துவங்கிடுங்கள்!

## முடிவுரை

உங்களது வாழ்க்கைத் துணையிடம் உங்களுக்கு இந்த நான்கு வகையான அன்பும் இருக்குமேயானால், உங்களது திருமணம் வாழ்நாளெல்லாம் நீடித்திருக்கும். உங்களது வாழ்க்கைத் துணை உங்களை நேசிக்கிறவரென்றும், பாலுறவின் இன்பத்தை நீங்கள் கொடுக்கவும் எடுக்கவும் உரியவர் என்றும் சம்பந்தப்படுத்திக் கொள்ளுங்கள். நீங்களிருவரும் சமூக வழக்கத்தின்படி, வைத்துக் காப்பாற்றும் கடமையுள்ளவர்களென்பதைப் புரிந்து கொள்ளுங்கள். உங்களது கணவனையோ அல்லது மனைவியையோ, உங்களோடு அநேக விஷயங்களில் சம்பந்தப்பட்டிருக்கிற நண்பராக ஒரு மிகச்சிறந்த நண்பராகப் பாருங்கள். வேறு யாருடன் நீங்கள் செலவிடும் நேரத்தையும்விட உங்களது வாழ்க்கைத் துணையுடன் அதிகப்படியான நேரத்தை செலவிட நீங்கள் விருப்பமுள்ளவராயிருக்க வேண்டும். உங்களது வாழ்க்கைத்துணை, தேவசாயலாக உண்டாக்கப்பட்டு அவரால் நேசிக்கப்படுகிறதோர் சிருஷ்டி என்பதையும் - கிறிஸ்து அவருக்காக மரித்திருக்கிறார் என்பதையும், கிறிஸ்து உங்கள்மேல் அன்புசெலுத்தியது போலவே நீங்களும் அவரிடத்தில் அன்பு செலுத்தவேண்டிய உரிமை பெற்றவர் என்பதையும் அறிந்து கொள்ள வேண்டும். தகுதியை நோக்காமல், பதிலுக்கு ஏதும் எதிர்பாராமல் நேசிக்கப்படுகிறவருக்கு மிகச்சிறந்தது எதுவோ அதையே விரும்புகின்ற, தன்னையே அர்ப்பணித்திடும் தன்னலமற்ற அன்பினால் அன்புகூருங்கள். அவ்விதமாக நீங்கள் அன்பு செலுத்தினால் உங்களது திருமணம் நீடித்திருக்கும்!

நார்மன் ரைட், ஆக *நீங்கள் திருமணம் செய்து கொள்ளப்போகிறீர்கள்* என்ற தமது புத்தகத்தின் ஓர் அத்தியாயத்தில் இதனை சிறப்பாக குறிப்பிட்டிருந்தார். திருமணத்தில் ஓர் "அன்புகூர்ந்திட வேண்டிய கடமை"[9] அடங்கி உள்ளது எனக் கூறியிருந்தார். நீங்கள் திருமணம் செய்துகொள்ளும்போது, நீங்கள் இருவரும் உயிரோடிருக்கும் வரை, தேவன் உங்கள் மீது எவ்விதம் அன்பு காட்டினாரோ அதே விதமாக நீங்களும் உங்களது வாழ்க்கைத் துணைமீது அன்பு பாராட்டிட

*பொறுப்பேற்கிறீர்கள்!*

---

*குறிப்புகள்*

[1]*ரோமர் 1:31லும், 2 தீமோத்தேயு 3:3லும், கிரேக்க பாஷையின் மூலவசனத்தில் ஏஸ்டோர்ஜோஸ் என்ற பதம் காணப்படுகிறது (storgosக்கு முன் a வருமாயின் அது எதிர்மறையான பொருளைத் தரும்). எனவே அதன் மொழியாக்கம், "அன்பில்லாத" என்பதாகும். பிற மொழியாக்கங்களில், "சுபாவ அன்பில்லாத" என்று காணப்படுகிறது (*KJV; ASV*).* RSV, NRSV, NIV *என்ற மொழிபெயர்ப்புகளில் ரோமர் 1:31ல் "இதயமே இல்லாத" என்றிருக்கிறது.* Phillips' *மொழிபெயர்ப்பு இவ்வகை அன்பற்றவர்களை, "பெற்றோருக்கு செய்யவேண்டிய கடமையை அவமதிக்கின்றவர்கள்" எனக் குறிப்பிடுகிறது. ரோமர் 12:10லே ஸ்டோர்ஜ் என்பது ஓர் கூட்டுச்சொல்லின் அங்கமாய் காணப்படுகிறது. அங்கே அது "சகோதர சிநேகம்" (*KJV*) அல்லது "சகோதர பாசம்" (*RSV*) என மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.* [2]David Roper, *Getting Serious About Love* (Searcy, Ark.: Resource Publications, 1992), 19. [3]W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 16. [4]*ரோப்பர், 21. புதிய ஏற்பாட்டில் இந்த ஃபிலியா, சிநேகம் என்பதன் வினைச்சொல்லான பிலியோ (சிநேகித்து) என்ற பதம் காணப்படும் பகுதிகளில் ஒன்று யோவான் 11:36. லாசருவின் கல்லறையினருகே இயேசு கண்ணீர் விட்டதைக் கண்ட யூதர்கள் ஆச்சரியப்பட்டு, "இதோ,இவர் அவனை எவ்வளவாய் சிநேகித்தார்" என்றார்கள்; யோவான் 16:27ல் இயேசு, "பிதா தாமே உங்களை சிநேகிக்கிறார்" என்றார். யோவான் 21:15, 16, 17ல் ஆண்டவருடைய கேள்விக்கு பேதுரு பதிலளிக்கையில், "உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர்" என்றான். மேலும் 1 கொரிந்தியர் 16:22; தீத்து 3:15; வெளிப்படுத்தின விஷேசம் 3:19 ஐயும் பார்க்கவும்.* [5]Ibid., *20.* [6]*கிறிஸ்தவ அன்பென்பது, அது சகோதரர் மீது காட்டப்படுவதாயிருந்தாலும், அல்லது உணர்ச்சிகளின் அடிப்படையிலிருந்து உருவாகும் உணர்வு அல்ல, எப்போதுமே அது இயல்பான நாட்டங்களை நோக்கி ஓடுவதில்லை, அதற்கு ஒத்த உணர்வுள்ளவர்களைக் கண்டுபிடித்து அவர்களுக்காக தன்னை செலவழித்துக் கொள்வதில்லை. "அன்பு எல்லோரது நலனையும் நாடுகிறது, ரோமர் 15:2 ..."* (C. F. Hogg and W. E. Vine, *The Epistles to the Thessalonians* [Grand Rapids, Mich.: Kregel Publications, 1959], 105). [7]*எடுத்துக்காட்டாக, இயேசுவானவர், "உங்கள் சத்துருக்களை சிநேகியுங்கள்" என்று தம்முடைய சீஷருக்கு கட்டளையிட்டபோது, அவர் "அகாபே" யின் வினைவடிவத்தையே "சிநேகியுங்கள்" என்று அவர் பயன்படுத்தினார். அவர்களது பகைவர் மீது அவர்கள் பாசம் கொள்ள வேண்டுமென அவர் ஆணையிடாமல், அதனை மனதார செய்திடுங்கள் என்றுதான் சொன்னார்.* [8]Coy Roper, "The Christian Husband," in "The Christian Man," Truth for Today (November 1997): 19. [9]H. Norman Wright, "Commitment to Love," *So You're Getting Married* (Ventura, Calif.: Regal Books, 1985), 51-66. *உங்களது கணவனையோ அல்லது உங்களது மனைவியையோ நேசிப்பதற்கு நீங்கள் உங்களை அர்ப்பணித்து விடுவீர்களேயானால், அந்த அர்ப்பணம் உங்களை இன்னும் அதிகமான அன்பிற்கு வழிநடத்தும் - அந்த அதிகப்படியான அன்பு உங்களை இன்னும் அதிகமான அர்ப்பணிப்பிற்கும், பின்னர் அந்த அர்ப்பணிப்பு அன்பிற்குமாக, இவ்வாறே மேன்மேலும் உங்களை வழிநடத்திடும்.*